# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

# ஆண்டறிக்கை

## ஏப்ரல்1, 2014 லிருந்து மார்ச் 31, 2015 வரை

தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டது

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை 2014 - 2015

இவ்வாண்டறிக்கை ஏப்ரல் 1, 2014 முதல் மார்ச் 31, 2015 வரையான காலத்திற்குட்பட்டதாகும்

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2014-2015

### பொருளடக்கம்



| பகுதி எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | முன்னுரை | 1 |
| 1 | செயல்பாடுகள் மற்றும் கடமைகள் | 3-6 |
| 2 | நேரடி நியமனங்கள் | 7 |
| 3 | தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை | 7 |
| 4 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள், மேல் முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை விதிகள் ஒழுங்கு முறைகள், தற்காலிக நியமனங்கள் இன்ன பிற | 8-9 |
| 5 | இதரத் தேர்வுகள் | 10 |
| 6 | அரசும் தேர்வாணையமும் | 11-12 |
| | ஏற்புரை | 13 |
| | பிற்சேர்க்கைகள் | |
| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண் |
| 1 | தேர்வாணையத்தில் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | 14 |
| 2 | வருவாய் மற்றும் செலவினம் | 15 |
| 3 | நேரடித் தேர்வில் இறுதித்தெரிவுகள் | 16-23 |
| 4 | வெளியிடப்பட்ட அறிவிக்கை பட்டியல் (Direct Recruitment) | 24 |
| 5 | முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு நடைபெற்ற விவரங்கள் | 25-28 |
| 6 | பல்வேறு தேர்வுகளில் தகுதியும் பொருத்தமும் இல்லாத தேர்வாளர்களால் ஏற்பட்ட நிரப்பப்படாத பணியிடங்கள் | 29-33 |
| 7 | பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட பதவிகளின் விவரம் | 34-36 |
| 8 | ஒழுங்குமுறை நடவடிக்கை/மேல்முறையீடு/சீராய்வு மனு/மறு ஆய்வு மனு/பணப்பிடித்தம்/ ஓய்வூதியக் குறைப்பு பற்றிய விவரங்கள் | 37-38 |
| 9 | தேர்வாணையத்தின் இசைவு வழங்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட விவரங்கள் | 39-41 |
| 10 | 24 மாதங்களுக்கு மேல் தொடரப்பட்ட தற்காலிக நியமனங்களுக்கான இசைவு அளித்த விவரம் | 42 |
| 11 | தேர்வாணையத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பட்டியல் (1930 முதல்) | 43-47 |
| 12 | கடந்த ஐந்தாண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்தது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசு முடிவெடுத்த நிகழ்வுகள். | 48 |
| 13 | வரைபடங்கள் | 49-50 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## 2014-2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

முன்னுரை :-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 315-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் பதவி ஒன்றும், உறுப்பினர் பதவி பதினான்கும் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். ஆண்டறிக்கை காலத்தில் தலைவரும், ஒன்பது உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாண்டறிக்கை காலத்தில் தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| திரு. அ.நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்<br>(பதவி விலகியதால் 13.06.2014 பி.ப பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்). | தலைவர் |
| திரு.க.சண்முக முருகன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்<br>(01.07.2014 பி.ப. பணியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு.கே.கே.இராஜா, எம்.ஏ., பி.எல்<br>(14.06.2014 பி.ப. பணியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| டாக்டர். சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ்., டி.சி.எச் | உறுப்பினர் |
| திரு. வெ.இரத்தினசபாபதி, பி.எஸ்.சி., பி.எட்., எம்.பி.ஏ | உறுப்பினர் |
| டாக்டர். பெ.பெருமாள்சாமி, எம்.எஸ்.சி., எம்.எட்., பிஎச்.டி | உறுப்பினர் |
| திரு. த.குப்புசாமி, பி.எஸ்.சி., பி.ஜி.எல் | உறுப்பினர் |
| திரு. க.செல்வமணி, பி.எஸ்.சி., பி.எல்., டி.பி.பி.ஏ | உறுப்பினர் |
| திரு. ஐ.ராஜா, இ.கா.ப (ஓய்வு)எம்.ஏ.,(பொருளியல்).,எம்.பி.ஏ(ஆஸ்திரேலியா)<br>(09.04.2014 பி.ப. பணியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு. செ.பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.எல்<br>(27.06.2014 மு.ப. முதல், தலைவராக கூடுதல் பொறுப்பு வகிக்கிறார்) | உறுப்பினர் |

செயலாளர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்

| | |
|---|---|
| திரு.ம.விஜயகுமார், இ.ஆ.ப<br>(15.11.2012 அன்று பணியேற்றார்) | செயலாளர் |
| திருமதி.வி.சோபனா, இ.ஆ.ப<br>(10.10.2012 அன்று பணியேற்றார்) | தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் |

மார்ச் 31, 2015 அன்றுள்ள படி தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பிற்சேர்க்கை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி-1

**செயல்பாடுகள் மற்றும் கடமைகள்:**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது பணிகள் மற்றும் செயல்பாடுகளை ஆற்றுகிறது. பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான தெரிவு விதிகள், பணிநியமனம், பதவிஉயர்வு மற்றும் பணி மாறுதல் போன்றவற்றில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக மாநில அரசுக்கு அறிவுரை வழங்குகிறது. மேலும் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளுக்கு நேரடி நியமனத்திற்கான போட்டித் தேர்வுகள், அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகள், இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல்பணி, இந்திய வனப்பணி மற்றும் மாநில குடிமைப் பணி அதிகாரிகளுக்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் டேராடுனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் அக்கல்லூரியின் சார்பாக தேர்வாணையம் நடத்துகின்றது.

**தேர்வு இதர பணிகள்:**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம்

### I. நேரடி நியமனத் தேர்வுகள் :-

**1. முதனிலைத் தேர்வுகள் :-**

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை (தொகுதி-I பணிகள்) | : | 1 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | : | 79 |
| தேர்விற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : | 1,63,651 |

**2.முதன்மைத் தேர்வுகள் :-**

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 13 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | : | 10,595 |
| தேர்விற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : | 30,16,201 |

**3.வாய்மொழித் தேர்வுகள் :-**

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 20 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | : | 728 |
| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 1,439 |

**4. இறுதித் தெரிவுகள் :-**

| | | |
|---|---|---|
| முற்றிலுமாக இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை | : | 23 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | : | 15,904 |
| இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 15,682 |

## II. இதரத் தேர்வுகள்

### 1. துறைத் தேர்வு - 2014

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : | 2,22,432 |
| தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | : | 1,62,092 |
| தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | : | 90,873 |

### 2. அரையாண்டுத் தேர்வுகள்

| | | |
|---|---|---|
| செப்டம்பர் 2014 தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 90 |
| மார்ச் 2015 தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 81 |

## III. பிற பணிகள்

1. பணி மாறுதல் மற்றும் பதவி உயர்வின் மூலம் நியமனம் : 697 நபர்கள்
2. கல்வித் தகுதி/வயது தொடர்பான விதிகளை தளர்த்தி பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு மூலம் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை : 20
3. அமைச்சுப் பணியில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு ஒரு வழி மாறுதல் அளித்தல் : 132 நபர்கள்
4. ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள்:
   தேர்வாணையத்தின் கருத்துக்கள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை : 401
5. ஒழுங்குமுறை விதி 16(b) இன் பிற்பகுதியின் கீழ் இசைவு அளிக்கப்பட்டவை : 1000 நேர்வுகள்
   (விவரங்கள் பிற்சேர்க்கை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளன)
6. வரவு மற்றும் செலவு

| | | (ரூபாய் ஆயிரங்களில்) |
|---|---|---|
| வரவு | ..... | 1,16.176 |
| செலவு | ..... | 6,52,105 |

(வரவு மற்றும் செலவின விவரங்கள் பிற்சேர்க்கை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.)

7. <u>அறிவிக்கைகள் :</u>
   20 பதவிகளுக்கான 5,796 காலிப்பணியிடங்களுக்கு 11 அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 13,05,102 ஆகும்.
   (விவரங்கள் பிற்சேர்க்கை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன)

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பிற்சேர்க்கை 13 -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 8. சீர்திருத்த நடவடிக்கைகள் / மறுசீரமைப்புகள் :

**அண்மைக்காலத்தில் தேர்வாணையத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாக்க நடவடிக்கைகள்**

**1. ஆண்டுத் தேர்வுத்திட்ட அட்டவணை :-**

விண்ணப்பதாரர்களுக்கு, நடப்பு ஆண்டில் நடைபெறவுள்ள தேர்வு விவரங்கள், தற்காலிக அறிவிக்கை நாள், தேர்வுத் தேதி மற்றும் முடிவு அறிவிக்கப்படவுள்ள காலம் ஆகிய விவரங்களை அளிக்கும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் தேர்வாணையம் ஆண்டுத் தேர்வுத் திட்ட அட்டவணையை வெளியிடுகிறது.

**2. இணையவழி விண்ணப்பம் :-**

தேர்வாணையம் 2012-ஆம் ஆண்டு முதல் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை இணையம் வழியாக பெறுகிறது. இதனால் தேர்வுக்கான ஏற்பாட்டுக்காலம் வெகுவாக குறைக்கப்பட்டதுடன் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிட ஏதுவாக உள்ளது. மேலும், காகிதத்தின் பயன்பாடு வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

**3. விண்ணப்பதாரர் சுயவிவரப்பக்கம் :-**

இணையவழி விண்ணப்பத்தில் அடுத்தகட்ட புதுமையாக விண்ணப்பதாரர்களுக்கான சுய விவரப்பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் விண்ணப்பதாரர்கள் நிரந்தரப் பதிவு செய்து தங்களது சுய விவரப் பக்கத்தினை உருவாக்கிக் கொள்ளலாம். அதில் விண்ணப்பதாரர்கள் விரும்பும் போது தங்களது கூடுதல் விவரங்களை அதில் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

**4. எளிமையான கட்டணம் செலுத்தும் முறை :-**

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்ப கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் ஆகியவற்றை பற்று அட்டை, கடன் அட்டை மற்றும் இணைய வங்கி மூலமாக எளிமையாகச் செலுத்தலாம். இவ்வசதி இல்லாத விண்ணப்பதாரர்கள் செலுத்துச்சீட்டு மூலமாக பாரத ஸ்டேட் வங்கி அல்லது அஞ்சலகம் வழியாகக் கட்டணம் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பக்கட்டணம் செலுத்தியதற்கான விவரங்களை விண்ணப்பதாரர்கள் அவர்களது சுய விவரப்பக்கத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**5. சிறப்பு மென்பொருள் :-**

தேர்வுக்கு முன் மற்றும் தேர்வுக்குப் பிந்தைய தரவுகளைக் கையாளுவதற்கென தனிப்பட்ட மென்பொருள் ஒன்றை தேர்வாணையம் உருவாக்கியுள்ளது.

**6. தேர்வுக்கூட நடவடிக்கைகள் - ஒளிப்பதிவு :-**

வினாத்தாள் கட்டுகள் திறக்கப்படுவது முதல் விடைத்தாள்கள் முத்திரையிட்டு அனுப்பப்படுவது வரையான அனைத்து தேர்வுக்கூட நடவடிக்கைகளும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. இது தவிர கூருணர்வுமையங்கள் இணையவழி ஒளிபரப்பு மூலம் தேர்வாணைய அலுவலகத்தில் இருந்து கண்காணிக்கப்படுகின்றன.

**7. கணினி வழித் தேர்வு :-**

தெரிவு நடவடிக்கைகளை விரைவுபடுத்தி தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிடும் வகையில் ஏறக்குறைய அனைத்து தொழில் நுட்பம் சார்ந்த பதவிகளுக்குக் கணினி வழித் தேர்வினை தேர்வாணையம் அறிமுகம் செய்துள்ளது.

**8. குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் :-**

விண்ணப்பப் பதிவு, சான்றிதழ் சரிபார்ப்பு, வாய்மொழித் தேர்வு மற்றும் கலந்தாய்வு போன்ற நேர்வுகளின் போது தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகின்றன.

**9. விடைகள் வெளியீடு :-**

ஒவ்வொரு தேர்வும் முடிந்த பின்னர் வினாக்களுக்கான ஆய்நிலையான (tentative) விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் அவ்விடைகளின் மீது ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்தால் அவை நிபுணர் குழுவின் முன் வைத்து சரியான விடைகள் பெறப்பட்டு மீண்டும் இணையதளத்தில் வெளியிடப்படும். இதன் மூலம் தேர்வாணையம் நடத்தும் தேர்வு முறைகளில் வெளிப்படைத்தன்மை நிலைநாட்டப்படுகிறது.

**10. சான்றிதழ் பதிவேற்றம் :-**

தெரிவு எல்லைக்குள் இருக்கும் விண்ணப்பதாரர்கள் தங்களது சான்றிதழ்களை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் தேவைக்கேற்ப நேர்காணலுக்கு முன்னரோ அல்லது கலந்தாய்வுக்கு முன்னரோ சரிபார்க்கப்படும்.

**11. தரவரிசை மற்றும் வெட்டு மதிப்பெண்கள் வெளியிடல்:-**

மொத்தமான தரவரிசைப் பட்டியல், சாதிவாரியான தரவரிசைப் பட்டியல், சிறப்பு பிரிவு வாரியாக தரவரிசைப் பட்டியல் ஆகியன ஒவ்வொரு தெரிவும் முடிவுற்றபின் வெளியிடப்படுகின்றன. தெரிவுகளை முடிவு செய்த பின்னர் ஒவ்வொரு பதவிக்குமான வெட்டு மதிப்பெண்கள் வெளியிடப்படுகின்றன.

**12. நேர்முகத்தேர்வு ஒளிப்பதிவு :-**

நேர்முகக்குழுமத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

**13. கலந்தாய்வு :-**

கலந்தாய்வில் ஒற்றைசாளர முறை பின்பற்றப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் மதிப்பெண்கள் அடிப்படையில் கலந்தாய்வுக்கு அழைக்கப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள் அவர்களின் முறையின்போது உள்ள துறை மற்றும் பதவிகளை தேர்ந்தெடுக்கலாம். கலந்தாய்வின் ஒவ்வொரு நாள் முடிவிலும் அன்றைய காலிப்பணியிட நிலவரம் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

**14. குறைதீர்க்கும் பிரிவு :-**

தேர்வாணைய அலுவலகத்தில், விண்ணப்பதாரர்களுக்கென கட்டணமில்லாத் தொலைப்பேசி வசதியுடன் குறைதீர்க்கும் பிரிவு செயல்பட்டு வருகிறது (கட்டணமில்லாத் தொலைப்பேசி எண 1800 425 1002). விண்ணப்பதாரர்கள் நேரிலோ, தொலைப்பேசி மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ குறைதீர்க்கும் பிரிவினை அணுகி தங்களது குறைகளுக்குத் தீர்வினைப் பெறலாம்.

*******

## பகுதி-2
## நேரடி நியமனங்கள்

அறிக்கைக்குரிய காலத்தில், தேர்வாணையம் 15904 காலிப் பணியிடங்களுக்கான 23 தெரிவுகளை முழுமையாக முடிவு செய்து, இறுதியாக 15682 விண்ணப்பதாரர்களை பணிநியமனத்திற்கு தேர்ந்தெடுத்தது. இறுதி முடிவு செய்த 23 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பிற்சேர்க்கை - 3 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### முதல்நிலைத் தேர்வு

அறிக்கைக்குரிய காலத்தில், 79 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான தொகுதி-I பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வினை தேர்வாணையம் நடத்தியது. இத்தேர்விற்கு 1,63,651 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

### முதன்மைத் தேர்வு

அறிக்கைக்குரிய காலத்தில், பல்வகைப் பணிகளில் 10,595 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 13 முதன்மைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்தியது. இம்முதன்மை தேர்வுகளுக்கு 30,16,201 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

### நேர்முகத் தேர்வு

அறிக்கைக்குரிய காலத்தில், 728 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான 20 தெரிவுகளுக்கு நேர்முக தேர்வுகளை நடத்தியது. தேர்வாணையம், 27 வேலை நாட்களில் நேர்முகத் தேர்வுகளை முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடத்தியது, சில நாட்களில் அதிகளவாக 6 குழுமங்கள் முற்பகலிலும் பிற்பகலிலும் இயங்கின. நடப்பு ஆண்டில், 27 வேலை நாட்களில் மொத்தம் 226 குழுமங்கள் அமைக்கப்பட்டு 1439 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய காலத்தில் நடந்த முதல்நிலைத் தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுகளின் விவரங்கள் பிற்சேர்க்கை 5 -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி-3
### தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை:

அறிக்கைக்குரிய காலத்தில் 140 காலிப்பணியிடங்கள் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் நிரப்பப்படவில்லை. அவை பின்வருமாறு:-
ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு - I 2009-11 (நே.தே) 32, ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு - I 2009-11 (நே.தே.அல்லாதவை) 9, ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு - I 2011-13 (நே.தே)-9, உதவியாளர் தலைமைச் செயலகப்பணி (தொகுதி -V அ - பணி மாறுதல் மூலம் தெரிவு)-27, தொகுதி IV (2013-14)- தட்டச்சர்-17, சுருக்கெழுத்து தட்டச்சர்-32, உதவி புள்ளியியல் ஆய்வாளர் (2009-2011)-2, காப்பாட்சியர்-1, உதவி காப்பாட்சியர்-1, செயல் அலுவலர் நிலை-I-ல் 1, உதவி அரசு வழக்குரைஞர் நிலை-II ல்-3, உதவி மருத்துவ அலுவலர் (யுனானி) -5 மற்றும் அறிவியல் உதவியாளர் நிலை II ல் -1.

வகுப்பு வாரியான விவரங்கள் பிற்சேர்க்கை 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி -4

**பணிமாறுதல் மூலம் நியமனம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல், ஒழுங்குமுறை நடவடிக்கை நேர்வுகள், மேல்முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை விதிகள், ஒழுங்குமுறைகள், தற்காலிக நியமனங்கள் மற்றும் பிற:**

1. **பணிமாறுதல் மூலம் நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலமாக தெரிவு :**

அறிக்கைக்குரிய காலத்தில் தொடர்புடைய சார் நிலைப்பணிகளிலிருந்து மாநிலப்பணிகளுக்கு பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளில் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை தேர்வாணையம் ஆய்வு செய்து 13 பணிகளில், பணியமர்த்த தகுதியும் பொருத்தமும் உடைய 697 அலுவலர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பிற்சேர்க்கை 7- ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. **ஒழுங்குமுறை நடவடிக்கை நேர்வுகள், மேல்முறையீடுகள், மனுக்கள் மற்றும் பிற :**

| | | | |
|---|---|---|---|
| அ | (I). அறிக்கைக்குரிய காலத்தில் ஆய்ந்த நேர்வுகளின் எண்ணிக்கை | : | 667 |
| | (II). (அ) தேர்வாணையம் தீர்வு செய்த நேர்வுகளின் எண்ணிக்கை | : | 399 |
| | (ஆ) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள நேர்வுகளின் எண்ணிக்கை | : | 79 |
| | (இ) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 10 |
| | (ஈ) ஆவணங்கள் கோரி அரசுக்கு திருப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 193 |
| | (III). தண்டனையில் மாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 41 |
| ஆ | (i) அரசுக்குத், தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 401 |
| | (ii) அவற்றின் மீது அரசு ஆணைப்பிறப்பித்த நேர்வுகளின் எண்ணிக்கை | : | 187 |
| | (iii) அரசு ஆணை பிறப்பிக்க வேண்டிய நேர்வுகளின் எண்ணிக்கை | : | 214 |

ஒழுங்கு நடவடிக்கை, மேல்முறையீட்டு மனு, சீராய்வு மனு, மறுஆய்வு மனு, பணப்பிடித்தம் ஓய்வுதியம் குறைப்பு ஆகியவைகளில், அலுவலர்கள் நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள்கொண்ட நேர்வுகள் என 621 நேர்வுகளின் விவரம் பிற்சேர்க்கை 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. **சட்டமுறை விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் பிற :**

மாநில, சார்நிலை, அமைச்சு மற்றும் தலைமைச் செயலக பணிகளில் நியமனம் செய்ய இசைவு கோரப்பட்ட 1000 நிகழ்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(b)இன் பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டது.

இசைவு அளிக்கப்பட்ட பதவிகள் மற்றும் பணிகளின் விவரங்கள் துறை வாரியாக பிற்சேர்க்கை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. **தற்காலிக நியமனங்கள்:**

தற்காலிக நியமனம் (நீட்சி) செய்யப்பட்ட நேர்வுகளில் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்ட விவரங்கள் பின்வறுமாறு (பிற்சேர்க்கை -10):

| காலம் | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| | மாநிலப் பணிகள் | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் | மாநிலப் பணிகள் | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் |
| (1) | (2) | (3) | (4) | 5) |
| 3 மாதங்களுக்குமேல் 12 மாதங்களுக்குள் | - | 50 | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | 7 | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | - | - | - |
| மொத்தம் | - | 57 | - | - |

5. **தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 20(a) (iii)-இன் படி இசைவு அளிக்கப்பட்டவை:**

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (a) (iii)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 132 ஆகும். இரண்டு நேர்வில் இசைவு மறுக்கப்பட்டுள்ளது.

6. **விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:**

ஆண்டறிக்கை காலத்தில் 40 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் 32 நேர்வுகளில் விதிகள் வெளியிடப்படும் முன் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட்டது. 8 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணைய உள்ளீட்டு எல்லைக்கு உட்படாத பதவிகளுக்கு உரியதாகவோ அல்லது இந்திய அரசியலமைப்பு சட்ட பிரிவுக்கூறு 320(3)இன்படி தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்பட தேவையில்லாததாக அமைந்துள்ளன.

7. **விதி தளர்வு:**

ஆண்டறிக்கை காலத்தில் 20 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

## பகுதி -5

## இதரத் தேர்வுகள்

### I. துறைத்தேர்வுகள்:-

2014-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 331 தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 2,22,432 நபர்கள் விண்ணப்பித்தனர். அதன் விவரம் பின்வருமாறு :-

| வ.எண். | விவரம் | மே - 2014 | டிசம்பர்-2014 |
|---|---|---|---|
| 1. | மொத்த பாடங்களின் எண்ணிக்கை | 74 | 73 |
| 2. | தேர்வு தாள்களின் எண்ணிக்கை | 167 | 164 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 1,22,847 | 99,585 |
| 4. | தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | 87,856 | 73,236 |
| 5. | தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | 51,727 | 39,146 |
| 6 | தேர்ச்சி விகிதம் | 58.8% | 53.4% |

### II. அரையாண்டுத் தேர்வுகள்:-

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வுகள் செப்டம்பர் 2014 மற்றும் மார்ச் 2015-இல் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளில் முறையே 90 விண்ணப்பதாரர்களும் 81 விண்ணப்பதாரர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

### III. இந்திய அரசின் இராணுவ கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கான தேர்வு:-

தேர்வாணையம் டேராடுனில் உள்ள இந்திய அரசின் இராணுவ கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கான தேர்வை அக்கல்லூரின் சார்பாக 2014 ஆம் ஆண்டு ஜுன் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடத்தியது. அவற்றில் 81 மாணவர்கள் ஜுன் மாதத்திலும் 80 மாணவர்கள் டிசம்பர் மாதத்திலும் கலந்துகொண்டனர்.

## பகுதி-6

## அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டு முடிவெடுத்தவை:-

**அறிக்கைக்குரிய காலத்தில், தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து இரண்டு நேர்வுகளில் மாறுபட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது . அதன் விவரம் பின்வருமாறு:-**

நேர்வு -I

அரசாணை (டி) எண் 460, பொதுப் பணித் (இ2) துறை, நாள் 04.11.2013

திரு. N. சோமன், கண்காணிப்பு பொறியாளர்(ஓய்வு), பொதுப்பணித்துறை, என்பவர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையான ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ. 2450/- வீதம் நிரந்தரமாக பிடித்தம் எனும் தண்டனையை ஏற்றுக் கொள்ளாததால் அரசு இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது.

தேர்வாணையம் தனது 12.02.2013 நாளிட்ட கடிதத்தின் மூலம், அரசால் வழங்கப்பட்ட தண்டனையான குற்ற அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ. 2,450/- வீதம் நிரந்தரமாக பிடித்தம் எனும் தண்டனை சற்று அதிகமாகக் காணப்படுவதால் குற்ற அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ. 2,450/- யை எட்டு வருடங்களுக்கு மட்டும் பிடித்தம் செய்யலாம் என்று தனது கருத்தினை அரசுக்கு தெரிவித்தது.

ஆனால், அரசு அரசாணை(டி)எண். 460, பொதுப்பணி(இ2)த்துறை, நாள் 04.11.2013-ல் அரசால் உத்தேசித்துள்ள தண்டனையை தகுந்த காரணங்கள் ஏதும் குறிப்பிடாமல், தேர்வாணையம் வழங்கிய கருத்திலிருந்து மாறுபட்டு, உத்தேசித்துள்ள தண்டனைத் தொகை அதிகமாக உள்ளது என்பதற்கான காரணத்தைச் சான்றாக தேர்வாணையம் கூறவில்லை எனக் குறிப்பிட்டு அரசால் விதிக்க உத்தேசிக்கப்பட்ட தண்டனையான குற்ற அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ. 2,450/- வீதம் நிரந்தரமாக பிடித்தம் செய்யலாம் என ஆணை வழங்கியுள்ளது.

இவ்வாறு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு-2

அரசாணை (2D) எண். 24, பள்ளிக்கல்வித்துறை (மேநிக1), நாள் 27.06.2012.

திரு. டி. முருகதாஸ், முன்னாள் தலைமை ஆசிரியர், கல்லணை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டம் என்பவர் தனக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வினை திரண்ட பயனுடன் இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்த தண்டனையினை எதிர்த்து அளித்த மறு ஆய்வு மனு தொடர்பான ஆவணங்களைத் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியுள்ளது.

தேர்வாணையம் தனது 07.02.2012 நாளிட்ட கடிதத்தில் வழுவுள்ள இறுதி ஆணையை இரத்து செய்து, முதலாவது குற்றச்சாட்டு குறித்து விசாரணை அலுவலர் அறிக்கையிலிருந்து அரசு மாறுபடுவதற்கான காரணங்களை மறுஆய்வு மனுதாரருக்குத் தெரிவித்தல் வேண்டும். பின்பு மறுஆய்வு மனுதாரரின் விளக்கத்தினை பெற்று இந்த வழக்கில் இறுதி உத்தரவு பிறப்பிக்கும்படி அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அரசு அரசாணை(2டி)எண்.24, பள்ளிக்கல்வித்துறை(மேநிக1), நாள் 27.06.2012-ல் மறுஆய்வு மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் யூகத்தின் அடிப்படையில் நிரூபணமாவதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், பள்ளி மாணவர் மாநில முதலிடம் பெற அவர் ஆற்றிய பணியினையும் கருத்திற்கொண்டு, அன்னாரின் மறுஆய்வு மனுவினை அனுமதித்து அன்னாருக்கு வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையை ஆணையை இரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்தது.

**ஆ. <u>தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கப்படாமை:-</u>**

**-ஏதுமில்லை-**

**இ.** அரசின் கொள்கை தொடர்புடைய விவகாரங்கள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர, தேர்வாணையத்தின் ஆலோசனைகளை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை குறிப்பிடுவதோடு எதிர்காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்ததும், தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசு முடிவெடுத்ததுமான இனங்கள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை -11 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# ஏற்புரை

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இடவசதி அளித்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளை திறம்பட நடத்தி முடிக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுப்பணிகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் அழைத்தபோதெல்லாம் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பொருட்படுத்தாமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்களுக்கும், ஆலோசனை வழங்கிய வல்லுநர்களுக்கும் இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாறுதல் மூலம் நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரிய பணியாளர்களை இறுதித் தெரிவு செய்து பரிந்துரை செய்ய அமைக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

இறுதியாக, தேர்வாணையத்தின் பணிகள் முறையாக நடைபெற ஆண்டு முழுவதும் உண்மையாகவும், திறமையாகவும் பணிபுரிந்த தேர்வாணையத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| முனைவர். க. அருள்மொழி, இ.ஆ.ப.,(ஓய்வு) | தலைவர் |
| டாக்டர் சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ்., டி.சி.எச் | உறுப்பினர் |
| திரு. த.குப்புசாமி, பி.எஸ்.சி., பி.ஜி.எல் | உறுப்பினர் |
| திரு. க.செல்வமணி, பி.எஸ்.சி., பி.எல்., டி.ப்பி.ப்பி.எ | உறுப்பினர் |
| திரு. செ. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.எல் | உறுப்பினர் |

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,**
**சென்னை-600 003.**

**திரு.மா.விஜயகுமார், இ.ஆ.ப**
**செயலாளர்**

**நாள் 16.12.2015**

## பிற்சேர்க்கை - 1

### 31.03.2015- அன்று உள்ளபடி தேர்வாணையத்தின் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் பணியிட எண்ணிக்கை பட்டியல்

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இணைச் செயலாளர் | 1 |
| 2 | துணைச் செயலாளர் | 3 |
| 3 | சார்புச் செயலாளர் | 20 |
| 4 | கணக்கு அலுவலர் | 1 |
| 5 | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 6 | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 7 | நூலகர் | 1 |
| 8 | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | 1 |
| 9 | பிரிவு அலுவலர் | 72 |
| 10 | தனிச் செயலாளர் | 1 |
| 11 | உதவிப் பிரிவு அலுவலர் | 168 |
| 12 | உதவிப் பிரிவு அலுவலருடன் இணைந்த கணினி திட்டமிடுனர் | 26 |
| 13 | உள்ளீடு-வெளியீடு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | 1 |
| 14 | உள்ளீடு-வெளியீடு இயக்குபவர் (கணிப்பொறி) | 1 |
| 15 | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | 8 |
| 16 | நேர்முக உதவியாளர் | 7 |
| 17 | நேர்முக எழுத்தர் | 12 |
| 18 | உதவியாளர் | 99 |
| 19 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 20 | தட்டச்சர் | 39 |
| 21 | பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர் | 23 |
| 22 | மின் தூக்கி இயக்குபவர் | 1 |
| 23 | முதன்மை ஏவலர் | 1 |
| 24 | ஊர்தி ஓட்டுநர் | 17 |
| 25 | அலுவலக உதவியாளர் | 92 |
| 26 | காவலர் | 6 |
| 27 | பெருக்குபவர் | 4 |
| 28 | துப்புரவுப்பணியாளர் | 3 |
| 29 | குடிநீர் வைப்பவர் | 1 |
| 30 | துப்புரவுப்பணியாளர் (கால ஊதியம்) | 11 |
| | மொத்தம் | 624 |

## பிற்சேர்க்கை -2

### [ பகுதி - 1 (III) (6) ]

### 2014-2015 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

| இனங்கள் | ( ரூபாய் ஆயிரங்களில் ) |
|---|---|
| வருவாய் | |
| தேர்வுக் கட்டணம் | 1,04,374 |
| விண்ணப்பக் கட்டணம் | 11,408 |
| பழைய பொருட்கள் விற்பனை | 249 |
| இதர வருவாய் | 121 |
| சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) | 24 |
| மொத்தம் | 1,16,176 |
| செலவு | |
| அடிப்படைச் சம்பளம் | 98,031 |
| மருத்துவப் படி, வீட்டுவாடகை, நகர ஈட்டுறுதிப் படி | 13,730 |
| அகவிலைப்படி | 1,02,314 |
| மருத்துவச் செலவுகள் | 750 |
| ஏனையப் படிகள் | 1,359 |
| விடுப்புப் பயணச் சலுகைகள் | 103 |
| அஞ்சல் செலவுகள் | 250 |
| பயணப் படிகள் | 967 |
| தொலைபேசி கட்டணங்கள் | 1,297 |
| ஏனைய சில்லரைச் செலவுகள், நூலக புத்தகம் வாங்குதல் மற்றும் அறைகலன் | 2,248 |
| தொழில்சார் மற்றும் சிறப்புப்பணிகளுக்கான உழைப்பு ஊதியம் | 3,96,247 |
| பரிசுகள் மற்றும் விருதுகள் | 14 |
| வாடகை / தண்ணீர் மற்றும் வரிகள் | 2,154 |
| கால முறை பராமரிப்பு | 480 |
| விளம்பரச் செலவுகள் | 6,821 |
| இயந்திரம் மற்றும் உபகரணம் வாங்கியது | 443 |
| இயக்க ஊர்தி வாங்குதல், பராமரிப்பு, வாடகை செலவு மற்றும் எரிபொருள் செலவு | 8,803 |
| கூலி | 5,661 |
| மின்சாரக்கட்டணம் | 3,674 |
| கணிப்பொறி துணைப்பொருள்கள் வாங்குதல், பராமரித்தல் மற்றும் எழுதுபொருள்கள் | 863 |
| அச்சக மற்றும் உபசரிப்பு செலவினம் | 124 |
| சிறுபணிகள் | 5,772 |
| மொத்தம் | 6,52,105 |

## பிற்சேர்க்கை - 3
## நேரடித் தேர்வு இறுதிமுடிவுகள் விவரம் (பகுதி 2)
## ஆண்டு 2014-2015

| வரிசை எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | முதன்மைத் தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் (தொகுதி-II) 2009-2011 (நேர்காணல் பதவிகள்) | 30 12 2010 | 09 10 2012 | 523 (149) | 107 (29) | 39 (4) | 693 (197) | 915 (252) | 121 (25) | 1077 (293) | 3475 (949) | 499049 | 480405 |
| 2 | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் (தொகுதி-II) 2009-2011 (நேர்காணல் அல்லாத பதவிகள்) | 30 12 2010 | 09 10 2012 | 482 (97) | 123 (9) | 33 - | 639 (135) | 820 (188) | 110 (8) | 964 (225) | 3171 (662) | | |
| 3 | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் (தொகுதி-II) 2011-2013 (நேர்காணல் பதவிகள்) | 13 06 2012 | 08 03 2013 | 217 (67) | 44 (14) | 14 (1) | 288 (80) | 385 (107) | 50 (15) | 444 (127) | 1442 (411) | 641288 | 641288 |
| 4 | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் (தொகுதி-II) 2011-2013 (நேர்காணல் அல்லாத பதவிகள்) | 13 06.2012 | 08 03.2013 | 189 (47) | 39 (12) | 17 (1) | 260 (65) | 330 (84) | 42 ( 8) | 385 (104) | 1262 (321) | | |
| | அடைப்புக்குள் குறிக்கப்பட்டுள்ள புள்ளி விவரம் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட / நிரப்பப்பட்டவையாகும் | | | | | | | | | | | | |

## பிற்சேர்க்கை - 3
## நேரடித் தேர்வு இறுதிமுடிவுகள் விவரம் (பகுதி 2)
## ஆண்டு 2014-2015

| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | | | | | | | | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள் | | | | | | | | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) |
| - | - | - | - | - | - | - | 6949 | 600 (232) | 104 (39) | 41 ( 7) | 1068 (407) | 1469 (615) | 136 (65) | 25 (13) | 3443 (1378) | பட்டப்படிப்பு | 32 பதவிகளுககுத் தகுதியும் பொருத்தமும் உள்ள விணணப்பதார்ாகள் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன கொண்டு செல்லபபட்டது |
| - | - | - | - | - | - | - | - | 559 (148) | 126 (57) | 27 ( 6) | 893 (224) | 1345 (482) | 116 (47) | 48 (19) | 3114 (983) | பட்டப்படிப்பு | 9 பதவிகளுக்குத் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதார்ாகள் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டன 44 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன., 4 பதவிகள் நீதிமன்ற ஆணைக்கிணங்க காலியாக வைக்கப்பட்டுள்ளன |
| - | - | - | - | - | - | - | 2533 | 239 (77) | 47 (16) | 13 (5) | 388 (116) | 676 (244) | 54 (18) | 16 (6) | 1433 (482) | பட்டப்படிப்பு | 9 பதவிகளுக்குத் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதார்ாகள் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டன 130 பி வ, 4 பி வ. (மு), 104 மி பி வ, 3 ப வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் |
| - | - | - | - | - | - | - | - | 188 (49) | 36 (11) | 16 (5) | 320 (80) | 622 (195) | 40 (11) | 17 (3) | 1239 (354) | பட்டப்படிப்பு | 295 பி.வ, 4 பி வ (மு), 61 மி பி.வ, 5 ப வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 23 பணியிடங்கள் அடுத்த கலந்தாய்வில் நிரப்பப்பட உள்ளன |
| | | | | | | | | | | | | | | | | | |

| வரிசை எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | முதன்மைத் தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 5 | உதவியாளர், தலைமைச் செயலகப் பணி (சட்டம் மற்றும் நிதித்துறை நீங்கலாக) பணி மாறுதல் மூலமாக தெரிவு (தொகுதி V அ) | 13 06 2012 | 01 07 2013 | 14 | 1 | 2 | 3 | 4 | - | 4 | 28 | 17912 | 17912 |
| 6 | தொகுதி - IV பணிகள் 2013-2014 இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், நில அளவையாளர், மற்றும் பிற., | 14 06 2013 | 05 03.2014 | 878<br>(216) | 178<br>(34) | 62<br>(5) | 1182<br>(309) | 1557<br>(399) | 221<br>(39) | 1845<br>(481) | 5923<br>(1483) | 1272862 | 1060401 |
| 7 | தொகுதி - I பணிகள் (2011-2013) | 16 11 2012 | 11 04 2014 | 2<br>(1) | 2<br>- | -<br>- | 4<br>- | 7<br>(3) | 2<br>(1) | 8<br>(3) | 25<br>(8) | 1153 | 1126 |
| 8 | உதவி புள்ளியியல் ஆய்வாளர், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி 2007-2011 | 1 03 2013 | 22 04 2014 | 36<br>(9) | 7<br>(2) | 2<br>- | 48<br>(12) | 63<br>(16) | 9<br>(2) | 75<br>(19) | 240<br>(60) | 10852 | 10490 |
| 9 | புள்ளியியல் தொகுப்பாளர், தமிழ்நாடு பொது நல சார்நிலைப் பணி 2005-2006. | 24 12 2012 | 28 04 2014 | - | - | - | - | - | - | 1 | 1 | 944 | 711 |
| 10 | காப்பாட்சியர் / உதவி காப்பாட்சியர், அருங்காட்சியகத் துறை, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி (2009-2010). | 02.05.2012 | 07 07 2014<br>காப்பாட்சியர் | 1<br>- | -<br>- | -<br>- | 1<br>(1) | 2<br>(1) | -<br>- | 1<br>- | 5<br>(2) | 1246 | 1246 |
| | | | உதவி காப்பாட்சியர் | 1<br>- | -<br>- | -<br>- | -<br>- | 1<br>- | -<br>- | 1<br>- | 3<br>- | 1597 | 1597 |

| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | | | | | | | | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள் | | | | | | | | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.வ | ப.வ (இ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | ப.வ | ப.வ (இ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) |
| - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | 1 | பட்டப்படிப்பு | 27 காலிப்பணியிடங்கள் தகுதியும் பொருத்தமும் இல்லாமையால் நிரப்பப்படவில்லை |
| - | - | - | - | - | - | - | - | 931<br>(264) | 195<br>(42) | 56<br>(15) | 1530<br>(471) | 2893<br>(1050) | 212<br>(67) | 57<br>(13) | 5874<br>(1922) | 10-ம் வகுப்பு | 32 கருக்கெத்து தட்டசச்ர் மற்றும் 17 தட்டச்சர் பதவிகளுக்குத் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாராகள் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டது. |
| 6<br>(4) | 6<br>(1) | -<br>- | 14<br>(1) | 25<br>(18) | 6<br>(4) | 3<br>(2) | 60<br>(30) | 2<br>(1) | 2<br>(1) | -<br>- | 4<br>(1) | 12<br>(8) | 2<br>(1) | 3<br>(2) | 25<br>(14) | பட்டப்படிப்பு | 5 பி வ விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| - | - | - | - | - | - | - | 642 | 40<br>(18) | 7<br>(2) | 2<br>(2) | 70<br>(32) | 106<br>(53) | 10<br>(6) | 3<br>(2) | 238<br>(115) | பட்டப்படிப்பு-37<br>முதுகலை -201 | 1 மி.பி.வ/சீ.ம பொது மற்றும் 1 ப.வ. (பெண்கள்) (காது கேளாதவர்) பணியிடங்கள் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் நிரப்பப்படவில்லை<br>19 பி.வ, 1 பி.வ. (மு), 10 மி.பி.வ, 4 ப.வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| - | - | - | 1 | - | - | 1 | 2 | - | - | - | 1 | - | - | - | 1 | முதுகலை | 1 மி.பி.வ. விண்ணப்பதாரர் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| 2<br>- | 1<br>- | -<br>- | 4<br>(2) | 8<br>(4) | -<br>- | -<br>- | 15<br>(6) | 1<br>- | -<br>- | -<br>- | 2<br>(1) | 1<br>(1) | -<br>- | -<br>- | 4<br>(2) | - | 1 மி.பி.வ விண்ணப்பதாரர் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார் 1 பி வ பொதுப்பிரிவில் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டது. |
| 4<br>(1) | -<br>- | -<br>- | -<br>- | 4<br>(1) | -<br>- | 1<br>- | 9<br>(3) | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | 2<br>(1) | -<br>- | -<br>- | 2<br>(1) | - | 1 பி வ விண்ணப்பதாரர் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1 ப.வ. தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டுசெல்லப்பட்டது |

| வரிசை எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | முதன்மைத் தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 11 | செயல் அலுவலர் நிலை - I, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சார்நிலைப் பணி 2009 -2010, 2010 - 2011. | 02 04 2012 | 01 08 2014 | 3<br>(1) | -<br>- | -<br>- | 3<br>(1) | 3<br>(1) | -<br>- | 5<br>(2) | 14<br>(4) | 2177 | 2177 |
| 12 | உதவி அரசு வழக்குரைஞர் நிலை - II தமிழ்நாடு பொதுப்பணி | 06 03 2013 | 07 08 2014 | 14<br>(3) | 3<br>(1) | 1<br>- | 19<br>(4) | 23<br>(4) | 4<br>(2) | 26<br>(6) | 90<br>(20) | 4630 | 4463 |
| 13 | உதவி மருத்துவ அலுவலர் (யுனானி) தமிழ்நாடு மருத்துவப் பணி 2012. | 16 11.2012 | 21 08 2014 | 10<br>- | 1<br>- | -<br>- | 8<br>- | 5<br>(1) | -<br>- | -<br>- | 24<br>(1) | 154 | 154 |
| 14 | மீன்வள துணை ஆய்வாளர், தமிழ்நாடு மீன்வள சார்நிலைப் பணி 2008-2009, 2009-2010, 2010-2012. | 24 12 2012 | 12 09 2014 | 2<br>- | 1<br>- | 1<br>- | 6<br>(3) | 6<br>(2) | 1<br>(1) | 7<br>(2) | 24<br>(8) | 2247 | 1962 |
| 15 | தொகுதி VI-ல் அடங்கிய வனப் பழகுநர், தமிழ்நாடு வன சார்நிலைப் பணி, (2006-2009) | 24 11 2010 | 12 09 2014 | 12<br>(4) | 3<br>(1) | 1<br>- | 16<br>(5) | 20<br>(6) | 3<br>(1) | 24<br>(7) | 80 | 10912 | 6120 |
| 16 | துளையிடுநர், தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி. | 24 12 2012 | 12 09 2014 | 4<br>- | 1<br>- | -<br>- | 5<br>(1) | 7<br>(1) | 1<br>- | 7<br>(1) | 25<br>(3) | 2444 | 1988 |
| 17 | அறிவியல் உதவியாளர் நிலை - II, தமிழ்நாடு தடய அறிவியல் சார்நிலைப் பணி 2012-2013. | 28 03 2013 | 09 10 2014 | 5<br>(1) | 1<br>- | 1<br>- | 7<br>(2) | 8<br>(3) | 1<br>(1) | 10<br>(3) | 33<br>(10) | 3847 | 3746 |

| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | | | | | | | | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள் | | | | | | | | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) |
| - | - | - | - | - | - | - | 35<br>(8) | 4<br>(1) | -<br>- | -<br>- | 4<br>(1) | 5<br>(3) | -<br>- | -<br>- | 13<br>(5) | பட்டப்படிப்பு -9<br>முதுகலை -4 | ஒரு பொதுப்பிரிவு மாற்றுத்திறனாளி (பார்வையற்றோர்) பணியிடம் தகுதியும் பொருத்தமும் உள்ள வினணப்பதாரர் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டது<br>2 பி வ, 1 மி பி வ, 1 ப.வ விண்ணப்பதாரர்கள பொதுப்பிரிவில் தேர்ந்தெடுககப்பட்டார்கள். |
| - | - | - | - | - | - | - | 128 | 20 | 2 | - | 23 | 37 | 5 | - | 87 | பட்டப்படிப்பு, முதுகலை | 1 ப வ (பெண்கள்) த வ பயின்றோர், 1 பி வ. (பெண்கள) காதுகேளாதவர், 1 பி வ (மு) (பெண்கள்) பணியிடங்கள் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டது<br>15 பி வ, 2 பி வ (மு), 4 மி.பி வ, 5 ப.வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் |
| -<br>- | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | 38<br>(15) | -<br>- | 38<br>(15) | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | -<br>- | 19<br>(5) | -<br>- | 19<br>(5) | பட்டப்படிப்பு முதுகலை, முனைவர் | பி வ (மு) தவிர பிற வகுப்புகளில் பொருத்தமான விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறவிலலை 5 காலிப் பணியிடங்கள் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன கொண்டுசெல்லப்பட்டது |
| 10<br>(2) | 4<br>- | 3<br>(1) | 17<br>(7) | 15<br>(8) | 4<br>(3) | -<br>- | 53<br>(21) | 5<br>(1) | 1<br>- | 1<br>- | 8<br>(3) | 8<br>(4) | 1<br>(1) | -<br>- | 24<br>(9) | பி.எப் எஸ். சி. -11, எம் எப் எஸ் சி -5, பி எஸ். சி (விலங்கியல்)-2, எம் எஸ்.சி. (விலஙகியல்)-4 எம் எஸ் சி. கடல்சார் படிப்பு -1 எம் எஸ் சி வனஉயிரியல் -1 | பார்வையற்றோர் சுழற்சி தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் அடுத்தத் தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டன மற்றும் பொது பிரிவிலிருந்து நிரப்பப்பட்டது |
| - | - | - | - | - | - | - | 170 | 13<br>- | 3<br>(2) | 1<br>- | 21<br>(2) | 38<br>(10) | 4<br>(1) | -<br>- | 80<br>(15) | பட்டப்படிப்பு -50<br>முதுகலை -29<br>முனைவர் -1 | 18 பி வ. 1 பி.வ.(மு), 5 மி பி.வ/சீ.ம விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| 14<br>(8) | 2<br>- | -<br>- | 11<br>(8) | 16<br>(10) | 3<br>(1) | -<br>- | 46<br>(27) | 6<br>(4) | 1<br>- | -<br>- | 7<br>(6) | 10<br>(7) | 1<br>(1) | -<br>- | 25<br>(18) | எச் எஸ்.சி. -8<br>பட்டப்படிப்பு -17 | 3 பி.வ, 2 மி பி.வ/சீ.ம 2 ப.வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| 10<br>(4) | 3<br>- | 2<br>(1) | 14<br>(5) | 20<br>(10) | 3<br>(3) | 3<br>(2) | 55<br>(25) | 6<br>(2) | 2<br>- | 1<br>- | 7<br>(2) | 13<br>(7) | 1<br>(1) | 2<br>(2) | 32<br>(14) | முதுகலை | 6 பி.வ, 2 ப.வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.<br>1 பி வ (பெ) பிரிவில் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர் இல்லாமையால் தெரிவு |

| வரிசை எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | முதன்மைத் தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 18 | நூலகர் நிலை - I. இயக்குநர் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரக திட்ட பொது சார்நிலைப் பணி 2012-2013. | 05 07.2013 | 28 10 2014 | - | - | - | - | - | - | 1 | 1 | 1042 | 799 |
| 19 | உதவி ஆணையர் மற்றும் செயல் அலுவலர் நிலை - I, தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை 2011 -2012 மற்றும் 2011-2014. | 21 02.2013 | உதவி ஆணையர் 29 10.2014 | 1<br>- | -<br>- | -<br>- | 1<br>- | 1<br>- | -<br>- | 1<br>(1) | 4<br>(1) | 861 | 749 |
| | | | செயல் அலுவலர் நிலை - I | 1 | 1 | - | 1 | 2 | - | 3 | 8 | | |
| 20 | உதவி ஆணையர், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை 2012 -2013 | 19 12 2013 | 06 11 2014 | 1<br>- | -<br>- | -<br>- | 1<br>(1) | 1<br>- | -<br>- | 1<br>- | 4<br>(1) | 507 | 415 |
| 21 | உதவி பொறியாளர் (தானியங்கி) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி மாநில பணிமனை 2009 - 2010. தமிழ்நாடு பொதுப்பணி | 01.11.2012 | 09.01.2015 | - | - | - | - | - | - | 1 | 1 | 881 | 148 |
| 22 | வரைவாளர் நிலை - III. தமிழ்நாடு நகர மற்றும் ஊரக திட்ட சார்நிலைப் பணி (2013-2014). | 24.02.2014 | 23.01.2015 | -<br>- | -<br>- | -<br>- | 1<br>- | 1<br>(1) | -<br>- | 3<br>(1) | 5<br>(2) | 980 | 749 |
| 23 | உதவி பிரிவு அலுவலர் (மொழிபெயர்ப்பு) தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல் துறை, தமிழ்நாடு தலைமைச் செயலக பணி 2007-2008 மற்றும் 2011-2012. | 06.12.2012 | 27.02.2015 | 3<br>(1) | 1<br>(1) | -<br>- | 3<br>(1) | 4<br>(1) | 1<br>- | 4<br>(1) | 16<br>(5) | 7024 | 6747 |
| | மொத்தம் | | | | | | | | | | 15904 | | |

| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | | | | | | | | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள் | | | | | | | | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) |
| - | - | - | - | - | - | - | 3 | - | - | - | 1 | - | - | - | 1 | எம்.பில்., | 1 மி.பி.வ. விண்ணப்பதாரர் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| 7<br>(2) | 3<br>- | -<br>- | 8<br>(1) | 14<br>(3) | -<br>- | -<br>- | 31<br>+<br>5 * | 1<br>- | -<br>- | -<br>- | 1<br>- | 2<br>- | -<br>- | -<br>- | 4 | எம்.ஏ., பி.எல்., | 2 பி.வ, 1 மி.பி.வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| | | | | | | | | 1 | 1 | - | 2 | 3 | - | - | 7 | பட்டப்படிப்பு | நீதிமன்ற ஆணையின் படி செயல் அலுவலர் நிலை -I பதவியில் பொதுப்பிரிவில் (பார்வையற்றோர்) பணியிடம் ஒன்று நிரப்பப்படாமல உள்ளது |
| 3<br>(1) | -<br>- | -<br>- | 3<br>(3) | 6<br>- | -<br>- | -<br>- | 12<br>(4) | 1<br>- | -<br>- | -<br>- | 1<br>(1) | 2<br>- | -<br>- | -<br>- | 4<br>(1) | பட்டப்படிப்பு -2<br>முதுகலை -2 | 1 பி.வ. விண்ணப்பதாரர் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| - | - | - | 2 | 1 | - | - | 3 | - | - | - | - | 1 | - | - | 1 | டி.எம்.இ.,<br>முதுகலை<br>பட்டயப்படிப்பு | 1 பி.வ விண்ணப்பதாரர் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| -<br>- | -<br>- | -<br>- | 4<br>(1) | 9<br>(5) | -<br>- | -<br>- | 13<br>(6) | -<br>- | -<br>- | -<br>- | 2<br>(1) | 3<br>(1) | -<br>- | -<br>- | 5<br>(2) | பட்டயப்படிப்பு,<br>பட்டப்படிப்பு | 2 பி.வ, 1 மி.பி.வ/சீ.ம விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| 11<br>(7) | 3<br>(3) | -<br>- | 13<br>(7) | 17<br>(5) | 2<br>(1) | -<br>- | 46<br>(23) | 4<br>(4) | 1<br>(1) | -<br>- | 4<br>(2) | 6<br>(2) | 1 | -<br>- | 16<br>(9) | பட்டப்படிப்பு<br>முதுகலை | 2 பி.வ, 1 மி.பி.வ/சீ.ம, 1 ப.வ. விண்ணப்பதாரர்கள் பொதுப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். |
| | | | | | | | | | | | | | | | 15682 | | |

* 5 விண்ணப்பதாரர்கள் உதவி ஆணையர் மற்றும் செயல்அலுவலர் நிலை-I ஆகிய இரண்டு பதவிகளுக்கும் தகுதியானவர்கள்

## பிற்சேர்க்கை -4

[ பகுதி - 1 (III) (7) ]

## 2014-2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்

| வ. எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | பதவிகளின் வகைகள் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | புள்ளியியல் ஆய்வாளர், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு சார்நிலைப் பணி 2013-2015. | 23.06.2014 | 1 | 6 | 6,757 |
| 2 | உதவிப் பணி மேலாளர், அரசு அச்சகம், தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுப் பணி மற்றும் உதவிப் பணி மேலாளர், தமிழ் அரசு அச்சகம், தமிழ்நாடு பொதுப் பணி. | 22.08.2014 | 2 | 9 | 852 |
| 3 | குடிமையியல் நீதிபதி, தமிழ்நாடு நீதிப் பணி (2013-2014) | 26.08.2014 | 1 | 162 | 9,592 |
| 4 | உதவி வனப் பாதுகாவலர், தமிழ்நாடு வனப் பணி | 19.09.2014 | 1 | 2 | 2,198 |
| 5 | தொகுதி - IV பணிகள், (பல்வேறு பதவிகள்) தமிழ்நாடு அமைச்சுப் பணி (2013-2014 மற்றும் 2014-2015) | 14.10.2014 | 6 | 4963 | 12,72,862 |
| 6 | உதவிப் புவியியலர், தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணிகள் (2013-2014) | 21.11.2014 | 1 | 1 | 428 |
| 7 | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், தமிழ்நாடு பொதுப் பணி (2012-2013) | 28.11.2014 | 1 | 117 | 4,461 |
| 8 | சுகாதார அலுவலர், தமிழ்நாடு பொது சுகாதாரப் பணி (2013-2014) | 10.12.2014 | 1 | 33 | 327 |
| 9 | உதவி வேளாண் அலுவலர், தமிழ் நாடு வேளாண் விரிவாக்க சார்நிலைப் பணி - (2011-2012) | 30.01.2015 | 1 | 417 | 3,616 |
| 10 | வேதியியலர், தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணி (2013-2014) | 06.02.2015 | 1 | 3 | 334 |
| 11 | உதவி மருத்துவ அலுவலர், (சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி) தமிழ்நாடு மருத்துவப் பணி | 26.03.2015 | 4 | 83 | 3,675 |
| | | மொத்தம் | 20 | 5796 | 13,05,102 |

## பிற்சேர்க்கை- 5

## [ பகுதி - 2 ]

## 2014-2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளின் விவரங்கள்

| வ. எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | | தேர்வு நாள் |
|---|---|---|---|---|---|---|
| | I – முதல்நிலைத் தேர்வு | | | | | |
| 1 | ஒருங்கிணைந்த குடிமைப்பணித்தேர்வு -I (தொகுதி – I) | 79 | 1,63,651 | 70,570 | | 20.07.2014 |
| | II – முதன்மைத் தேர்வுகள் | | | | | |
| 1 | வரைவாளர் நிலை - III (2013-2014) | 5 | 981 | மு.ப. 303 | பி.ப. 301 | 03.05.2014 மு.ப & பி.ப. |
| 2 | மாவட்ட கல்வி அலுவலர் (2012) | 11 | 20,293 | 19,614 | | 08.06.2014 |
| 3 | கிராம நிர்வாக அலுவலர் (2013 -2014) | 2,342 | 10,09,125 | 7,62,846 | | 14.06.2014 |
| 4 | ஒருங்கிணைந்த குடிமைப்பணித்தேர்வு -II (தொகுதி – II அ) (நேர்முகதேர்வு அல்லாதவை) | 2,846 | 6,33,635 | 4,29,332 | | 29.06.2014 |
| 5 | ஒருங்கிணைந்த பொறியாளர் பணிகள் தேர்வு | 98 | 54,690 | மு.ப. 31,637 | பி.ப. 31,189 | 27.07.2014 மு.ப & பி.ப. |
| 6 | புள்ளியியல் ஆய்வாளர் (2013-2015) | 6 | 6,757 | மு.ப. 1,623 | பி.ப. 1,608 | 11.10.2014 மு.ப & பி.ப. |
| 7 | அரசு அச்சகத்தில் உதவி பணி மேலாளர் | 9 | 852 | மு.ப. 432 | பி.ப. 432 | 01.11.2014 மு.ப & பி.ப. |
| 8 | உரிமையியல் நீதிபதி (2013-2014) | 162 | 9,592 | மொழிபெயர்ப்பு = 6,539<br>சட்டம் I = 6,494<br>சட்டம் -II = 6,251<br>சட்டம -III = 6,190 | | 01.11.2014 மற்றும் 02.11.2014 மு.ப & பி.ப. |
| 9 | உதவி வன பாதுகாவலர் | 2 | 2,198 | 388 | | 02.12.2014 முதல் 9.12.2014 வரை |
| 10 | தொகுதி - IV பணிகள் (2013-2014 மற்றும் 2014 -2015) | 4,963 | 12,72,862 | 10,60,401 | | 21.12.2014 |
| 11 | உதவி புவியியலர் (2013 - 2014) | 1 | 428 | 41 | | 01.02.2015 மு.ப & பி.ப. |
| 12 | குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் (2012-2013) | 117 | 4,461 | மு.ப. 3,300 | பி.ப. 3,296 | 15.02.2015 மு.ப & பி.ப |
| 13 | சுகாதார அலுவலர் | 33 | 327 | மு.ப. 146 | பி.ப. 144 | 22.02.2015 மு.ப & பி.ப |
| | மொத்தம் | 10,674 | 31,79,852 | 23,87,172 | | – |

# III –நேர்முகத் தேர்வு

| வ. எண் | நாள் | பதவி மற்றும் பணியின் பெயர் | காலிப்பணியிடங்கள் | அமர்வு | குழுமங்கள் I | II | III | IV | V | VI | VII | VIII | IX | X | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 07.04.2014 | தொகுதி - I பணிகள் (2011- 2013) | 25 | மு.ப. | 6 | 6 | 6 | 6 | 6 | - | - | - | - | - | 30 |
| | | | | பி.ப. | 6 | 6 | 6 | 6 | 6 | - | - | - | - | - | 30 |
| 2 | 28.04.2014 | புள்ளியியல் தொகுப்பாளர், தமிழ்நாடு பொது நல சார்நிலைப் பணி 2005-2006. | 1 | மு.ப. | 3 | - | - | - | - | - | - | - | - | - | 3 |
| 3 | 21.07.2014 | நூலகர் நிலை-I, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி 2012-2013 | 1 | பி.ப. | 3 | - | - | - | - | - | - | - | - | - | 3 |
| 4 | | செயல் அலுவலர் நிலை - I, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சார்நிலைப் பணி 2009-2010 முதல் 2010-2011 வரை | 14 | பி.ப. | 4 | 4 | - | - | - | - | - | - | - | - | 8 |
